பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

S. M. Fernando
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATEY
DISPENSED
580, HOSPITAL ROAD,
[Near Bank of Ceylon]
JAFFNA.

# உதயன்

விலை ரூபா 3·50

கண்வைத்தியநிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாகக் கொடுப்பவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஞூ மாசி மீ 24 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 10 (08-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 2 8

# இரண்டொரு தினங்களில் யாழ் - கொழும்பு இரவு ரயில்!

## போக்குவரத்துச் சேவையை சீர்படுத்தவும் ஜனாதிபதி புலிகளுக்கு உறுதிமொழி

கொழும்பு, மார்ச் 8

யாழ். — கொழும்பு இரவு ரயில் சேவை இன்னும் இரண்டொரு தினங்களுக்குள் ஆரம்பமாகும்.

இதற்கான உறுதி மொழியை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா தம்மைச் சந்தித்த விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கு வழங்கியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் இத்தகவலை உதயனுக்கு வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பஸ், ரயில் மற்றும் போக்குவரத்துச் சேவைகளை சிர்செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணித்திருப்பதாக அவர் கூறினார்,

ஜனாதிபதியை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சந்தித்த போது வடக்கு, கிழக்கு மக்கள் அனுபவித்து வரும் கஷ்டம் குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் எடுத்துரைத்ததாகவும் —

அதன் ஒரு பகுதியாக போக்குவரத்துக் கஷ்டங்கள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

''ஜனாதிபதி உறுதிமொழி அளித்திருப்பதால் இரவு ரயில் சேவை எப்போது ஆரம்பமாகும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று டாக்டர் பாலசிங்கத்திடம் கேட்ட போது —

''இரண்டொரு தினங்களில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கிறோம்'' என அவர் பதிலளித்தார்.

போக்குவரத்துச் சேவைகளை சீர்செய்யவும், இது தொடர்பாக மக்கள் அனு

(2ஆம் பக்கம் பார்க்க)

## பானைக்குள் விழுந்த நண்டு!

கொழும்பு, மார்ச் 8

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது ''பானைக்குள் விழுந்த நண்டு'' ஒன்றின் கதைபற்றி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா பிரஸ்தாபித்தார்.

அவர் கூறியதாவது :-

அடுப்பின் மேல் வைக்கப்பட்ட பானை ஒன்றிற்குள் போடப்பட்ட நண்டு ஒன்று தான் பெரும் சமுத்திரத்தில் இருப்பதாக நினைத்தது.

ஆனால் பானையில் உள்ள நீர் கொதிக்க ஆரம்பித்த பின்னர்தான் தனக்கு உதவி இல்லை என்பதை நண்டு உணர்ந்தது.

கொதிக்கும் பானைக்குள் இருக்கும் நண்டு போன்ற நிலையில் திரு. வரதராஜப் பெருமாள் இருக்கிறார். அவரால் பானைக்குள் இருந்து வெளியே வரமுடியாது.

சுதந்திரக்கட்சி எம். பி. ஆனந்தஸநாயக்கா: அப்படியானால் பிரபாகரன் எப்படி?

திரு. விஜேரத்னா: அவர் பானைக்குள் இல்லை. அவருடன் நாங்கள் எல்லாரும் சேர்ந்து, உங்கள் அனைவரையும் பானைக்குள் போட முடியும்.

பானைக்குள் இருக்கும் நண்டுக்கு என்ன நடக்கும் என்பது திரு வரதராஜப்பெருமாளுக்குத் தெரியவில்லை.

மார்ச் 31 அளவில் அவர் பானைக்குள்ளேயே அவிந்து விடுவார். (உ-எ)

## கிளிநொச்சியில் சனியன்று புலிகளின் பொதுக் கூட்டம்

கிளிநொச்சி, மார்ச். 8

வடக்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) கலந்துகொள்ளும் முதலாவது பகிரங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை கிளிநொச்சி நகரில், பரவிப்பாஞ்சான் மருதடி மைதானத்தில் நடைபெறும்.

மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ள இந்தப் பொதுக்கூட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர்

(5ஆம் பக்கம் பார்க்க)

## இனிமேல் 'கிராம்' கணக்கில் தங்க நகை வியாபாரம்!

யாழ்ப்பாணம் மார்ச் 8

தங்க நகை விற்பனை இனிமேல் கிராம், மில்லி கிராம் அளவிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். பவுண், மஞ்சாடி என்ற அளவுகளைப் பாவிக்க வேண்டாம். — இவ்வாறு யாழ் மக்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். செயலகத்தின் அளவை நிறுவைப்பகுதி பொறுப்பதிகாரி திரு. க. நாகலிங்கம் இவ்வாறுவேண்டுகோள் விடுத்துள்ளார்.

நகை வியாபாரிகள் தமக்கு என வழங்கப்பட்ட புதிய தராசுகளில் புதிய கிராம் படிகளுடனேயே விற்பனை நடாத்த வேண்டும்.

அதற்கு மாறாக பழைய படிகளையும், மஞ்சாடிகளையும் உபயோகிப்போர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்— என்றும் அவர் தெரிவித்தார். (உ-10)

## முச்சந்தி முரளி



அப்ப இனி சீதனப் பேச்சு கிராம் கணக்கிலை தான் நடக்கும் எண்டு சொல்லுங்கோ....!

## 50 தமிழ் பொலீஸார் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 8

பொலீஸ் கான்ஸ்டபிள் பதவிகளுக்கு யாழ்ப்பாணம் வன்னி மாவட்டங்களில் இருந்து 50 தமிழ் இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நடைபெற்ற பொலீஸ் கான்ஸ்டபிள்களுக்கான பரீட்சையில் தோற்றி அதில் தெரிவானோருக்கு கடந்த மாதம் அனுராதபுரம் பொலீஸ் நிலையத்தில் இறுதிப்பரீட்சை நடைபெற்றது.

இந்த இறுதித் தேர்வில் இருந்தே தற்போது 50 பேர் கான்ஸ்டபிள் பதவிக்கு தெரி

(2ஆம் பக்கம் பார்க்க)

## காண்டீபன் காலமானார்



யாழ்ப்பாணம், மார்ச் 8

விபத்தில் படுகாயமடைந்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி மேஜர் காண்டீபன் நேற்று நண்பகல் ஆஸ்பத்திரியில் காலமானார்.

அவரது மரணச் செய்தி நேற்று மாலையில் மக்கள் மத்தியில் வெளியானதை அடுத்து யாழ் நகரமும் வட பகுதியும் சோகத்தில் ஆழ்ந்தன.

வீதிகள் எங்கும் கறுப்புக் கொடி, தோரணங்கள், வாழைகள் கட்டப்பட்டன. நகரின் பல பகுதிகளிலும் ஒலிபெருக்கி மூலம் சோக கீதங்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.

1987ஆம் ஆண்டு கைதடி

(5ஆம் பக்கம் பார்க்க)

## கண்டாவளையில் இறுதிக் கிரியைகள்

### மாத்தயாவும் பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம், மார்ச் 8

நேற்றுக் காலமான மேஜர் காண்டீபனின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக இன்று நண்பகல் 2·00 மணிக்கு அவரது சொந்த ஊரான கண்டாவளைக்கு சகல மரியாதைகளுடனும் எடுத்துச் செல்லப்படும்.

நேற்று மாலையில் நீர்வேலியில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பூதவுடல் நேற்றிரவு யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டது.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் மனோகரா தியேட்டர் சந்திக்கு அருகில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமில் நேற்றிரவு முதல் இன்று

(5ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் படைவாபஸ் சனியன்று ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 8

திருகோணமலைப் பட்டினத்தில் இருந்து அமைதிப் படையினர் வாபஸ்பெறுவது நாளை மறுநாள் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகும்.

இதனை அமைதிப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

திருகோணமலை பட்டினத்தைத் தவிர திருகோணமலையின் ஏனைய பகுதிகளில் இருந்து அமைதிப்படை விலகல் பூரணமாகி விட்டது.

திருமலைப்பட்டினத்தில்

(2ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தயா-யோகி வன்னிக்குப் புறப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 8

பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக கொழும்புக்குச் சென்றிருந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) செயலாளர்நாயகம் திரு. யோகரட்ணம் யோகி ஆகியோர் நேற்று நண்பகல் கொழும்பிலிருந்து புறப்பட்டு வவுனியாவுக்குச் சென்றனர்.

அங்கிருந்து வன்னிப்பகுதிக் காட்டுக்குள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தங்கியிருக்கும் இடத்துக்கு அவர்கள் இருவரும் செல்வார்கள் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு பேச்சுவார்த்தை விபரங்களை திரு. பிரபாகர

(5ஆம் பக்கம் பார்க்க)

### காலையில் ஹமீதுடன் பேச்சு!

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு.மாத்தயா, பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி ஆகியோர் நேற்றுக் காலையில்— வவுனியாவுக்குப் புறப்பட முன்னர்— உயர் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஜனாப். ஏ.ஸி.எஸ். ஹமீதை சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர். அன்ரன் பாலசிங்கமும் உடனிருந்தார்.

## புலிகளுடனான போரில் இந்தியப்படைக்கு தோல்வி!

### பி.பி.ஸி.பேட்டியில் மாத்தயா

கொழும்பு, மார்ச் 8

இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த போரில் அமைதிப்படை தோற்றுவிட்டது,

—இப்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) வலியுறுத்திக் கூறினார்.

கொழும்பில் உள்ள பி. பி. ஸி. செய்தியாளர்களில் ஒருவரான திரு.மேர்வின் டி சில்வாவுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கிறார்.

இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போராட விடுதலைப்புலிகள் கொண்டிருந்த திறமையைக் குறைவாக மதிப்பிட்டமை—

ஆயுதபலத்தில் கூடுதலாக நம்பிக்கை வைத்து இருந்தமை—

பழக்கப்படாத இடங்களில் போரிடவேண்டி இருந்தமை — ஆகியவைதான் இந்திய இராணுவத்தின் தோல்விக்குக் காரணம் என்றும் திரு. மாத்தயா சொன்னார்.

''70 ஆயிரம் வீரர்களுடன் வந்திறங்கிய இந்திய அமைதிப்படை, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற 30 நாட்கள் பிடித்தன. இந்த ஒருமாத காலத்தில் இந்தியப் படையின் பலத்தையும் பலவீனத்தையும் நாம் தெரிந்துகொண்டோம்''.

—உலகின் நான்காவது

(5ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

8 - 3 - 1990

வியாழக்கிழமை மாசி 24

சுப நேரம்:
7-55 முதல் 9-25 வரை

ராகுகாலம்:
01-55 முதல் 3-25 வரை

பிரதோஷ விரதம்

## இந்தியாவுக்கு வரதர் குழுவை அழைத்துக்கொண்டு போங்கள்!

### தூதரிடம் ரஞ்சன் சொன்னாராம்

கொழும்பு. மார்ச் 8

திரு. வரதராஜப்பெருமாளையும் அவரது எடுபிடிகளையும் இந்தியாவுக்கு அழைத்துக்கொண்டால் நல்லது என்று நான் இந்தியத் தூதரிடம் கூறிவிட்டேன்.

இதனைத் தனது தலைவர்களிடம் தெரிவிக்க இந்தியத் தூதர் இந்தியா செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

— இவ்வாறு கூறியுள்ளார் வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா.

'ஈழப் பிரகடனம்' குறித்து கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அவர் அங்கு மேலும் சொன்னதாவது;

இலங்கை அரசியல் சாசனத்தை வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் மீறிவிட்

[5 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயம், பீட்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

### For Sale

Typewriters - New Standard English Typewriters Available Contact: Fudo 39/17. Power House Road, 3rd Lane, Jaffna. (Near: Shabra-Samy & Co) (C/3951)

### அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்

சகல டிசைன்களிலும் அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ் காட்டுகள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, (பஸ் நிலையம் முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/3486)

### தேவை

பத்திரிகை மொத்த விற்பனை (Paper Merchant) நிறுவனத்திற்கு விற்பனையாளர் இருவரும், விற்பனை உதவியாளர் இருவரும், உடன் தேவை 35 வயதிற்கு உட்பட்டவராகவும், முன் அனுபவம் உடையவராகவும் இருப்பது விரும்பத்தக்கது. Ganga Enterprises, 358 K. K. S Raod, Jaffna. (சி/3963)

### டிலிவரி சைக்கிள் தேவை

நல்ல நிலையில் டிலிவரி சைக்கிள் வைத்திருப்பவர்கள் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். அருண் மார்க்கெட்டிங் அன் அட்வேர்ட்டைசிங் சேவிஸ், 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### மணமகள் தேவை

யாழ் இந்து உயர், வேளாள குல, கனடாவில் தொழில் புரியும் நற்பழக்கமுள்ள 2 இல் செவ்வாய்க் குற்றமுடைய 34 வயதுடைய மகனுக்கு படித்த பண்புள்ள இதே இனத்தைச் சேர்ந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். சாதக குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். சீதனம் எதிர்பார்க்கப்படுகின்றது. No. 632. C/o உதயன் (2815)

யாழ், இந்து, வேளாளர் குலத்தைச் சேர்ந்த பெற்றோர், 38 வயது செவ்வாய்க் குற்றமற்ற வெளிநாடொன்றில் 5 வருடங்களாகத் தொழில் செய்து கொண்டிருக்கும் மகனுக்கு A/L வரை படித்தமணப்பெண்ணை தேடுகிறார்கள் கனடாவில் வசிப்பவருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். குறிப்பு மற்றும் விபரங்களுடன் தொடர்பு: No. 634 C/O உதயன். (2823)

### தவறிவிட்டது

மகாலிங்கம் மதியழகன் ஆகிய எனது அடையாள அட்டை 22-02-90 இல் வேலணைக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். (12007)

T. தயாளசுந்தரன் ஆகிய எனது 633062765 V எனும் இலக்கமுள்ள அடையாள அட்டை தவறி விட்டது கிடைத்தவர்கள் உதயன் காரியாலயத்திலோ அன்றி T. தயாளசுந்தரன் தோப்புக்காடு, காரைநகர் என்ற முகவரிக்கோ தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். [2827]

### புத்தகம்

இந்திய எழுத்தாளர்களான லக்ஸ்மி, சிவசங்கரி அனுராதாரமணன், பாலகுமாரன், ரமணிச் சந்திரன் மேத்தா, உதயமூர்த்தி, பி. சி. கணேசன், வரதராசன், கண்ணதாசன், சிறுவர் புத்தகங்கள், ஜோதிடம், சித்த மருத்துவம், புத்தகங்கள் வந்துள்ளன பிரதிகட்கு முந்துங்கள் நூல்களை தொகையாக கொள்வனவு செய்வோர், வியாபாரிகட்கு, விசேட கழிவு. ஸ்ரீகாந் புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (சி/3488)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராசதுரை மனோன்மணி

[சீனியர் அம்மா]

மலர்வு: 17 - 08 - 1914 உதிர்வு: 18 - 03 - 1989

திதி: 08 — 03 — 1990

ஆண்டுகள் ஒன்று சென்றாலும் உங்கள் பாசமும் பண்பும் என்றும் எங்கள் மனதைவிட்டு அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை, சகோதரங்கள், உறவினர்கள்,
இணுவில் தெற்கு.

[12010]

# மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு ம. து. ம. ச. அளிக்கும் உதவிகள்

மன்னார் மார்ச் 8

மன்னார் மாவட்டத்தில் விவசாய இலாகா, கமநல சேவை நிலையங்கள் போன்றவற்றுடன் இணைந்து, மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் கடந்த காலபோகம் 89/90 ஆம் ஆண்டில், 1000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல், உப உணவு விதைகள் போன்றவற்றை வழங்கியது.

இருந்தும் கடந்த வருடம் கிடைத்த குறைந்த மழை வீழ்ச்சியினாலும் குறுகியமாத விதைநெல் தட்டுப் பாட்டினாலும், இம்மாவட்டத்தில் 40% நெற்செய்கை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. தை மாதம் முதற் கிழமைகளில் எதிர்பாராமல் கிடைத்த 235 மி. மீ. க்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியினால், சிறு குளங்களில் போதியளவு நீர் காணப்பட்டது. இதைப் பயன் படுத்தி துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் 1990 ஆம் ஆண்டில் இடைப்போகம் செய்வதற்கு விவசாயிகளை ஊக்கப்படுத்தியது.

நிலத்தினதும், நீரினதும், உச்சப் பயனை பெறும் பொருட்டு, இச்சங்கம் சகல கமநல சேவை நிலையங்களுக்கும், கிராமிய மட்ட ஸ்தாபனங்களுக்கும் தேவையான உப உணவுவிதைகளையும், மரக்கறி விதைகளையும், இலகு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. இதில் பாசிப் பயறு, கௌபீ, டுபாய்பூசணி நிலக்கடலை, மரக்கறி விதைகள், போன்றன அடங்கும்.

மன்னார் மாவட்ட விவசாயிகள் தமக்குத் தேவையான விதைபொருட்களைஇந்நிலையங்களில் பெற்றுக் கொள்ளுமாறு இச் சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். இத்திட்டத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.நா) நிதியுதவி வழங்கி வருகிறது.

மேலும் இச் சங்கம் 1990ம் கல்வி ஆண்டில் தாய், தந்தையர் அற்ற பாடசாலை மாணவர்களுக்கும் ஏழைச் சிறுவர்களுக்கும் பாடசாலை உபகரணங்களையும் சீருடை விநியோகிக்க இருக்கிறது. (க)

## சேவை நலம் பாராட்டு விழா

குருநகர், மார்ச் 2

"35 வருடங்கள் ஆசிரியப் பணிபுரிந்துள்ள ஆசிரியையின் சேவை மிகவும் மகத்தானது. மாணவர்களின் கல்விவளர்ச்சி ஒழுக்கம் என்பவற்றில் கண்ணும் கருத்துமாகக் கடமையாற்றினார்."

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தில்பணிபுரிந்து ஓய்வு பெறும் திருமதி. சிவபாக்கியம் கணேசப்பிள்ளையின் சேவை நலன் பாராட்டு வைபவத்தில் வித்தியாலய அதிபர் திரு. க. கனகசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர்களும் மாணவர்களும் ஒழுங்கு செய்த இவ் வைபவத்திற்கு உப அதிபர் திரு. வ. சுந்தசாமி தலைமை வகித்தார்.

அதிபர் தொடர்ந்து பேசுகையில் "முதுமையான காலத்திலும் இளமைத் துடிப்புடன் கடமை புரிந்ததை மறக்க முடியாது" என்றார்.

ஆசிரியர்கள் சார்பாக பாராட்டிப் பேசிய திருமதி. ம. செல்லத்துரை" யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் தங்கம்மா அப்பாக்குட்டி என்று சக ஆசிரியர்கள்குறிப்பிடப்பட்ட திருமதி. சிவபாக்கியம் கணேசன்ளை மாணவர்களுக்கு ஏற்ற நற்சிந்தனைகளையும் சமயப் பேச்சுக்களையும்தன துஇனிய குரலால் தேவாரத்துடன் ஆரம்பித்து உரையாற்றுவார் என்றார்.

மகா வித்தியாலய ஆசிரியர்கள் மாணவர்கள் ஓய்வு பெறும் ஆசிரியைக்கு மாலைகள் அணிவித்துபரிசுப் பொருள்கள் வழங்கி தமது அபிமானத்தைத் தெரிவித்துக் கொண்டனர். (இ-51)

### உலக பண்பாட்டு இயக்க 15 ஆவது ஆண்டு நிறைவு மகாநாடு மாபெரும் கண்காட்சி

கண்காட்சிக்கு ஈழத்து நாவல்கள், பத்திரிகை, சிற்பங்கள், ஓவியங்கள், கைப்பணிப் பொருட்கள் போன்றவை இடம்பெறும்.

ஈழத்து எழுத்தாளரும், மாணவர்களும், நிறுவனங்களும் பங்குபற்றலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
கண்காட்சி பொறுப்பாளர்
M. ஜெயந்தன்.
விக்னா டியூசன் சென்ரர்,
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(சி/3494)

### எமது நண்பர்களின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**ஐயாத்துரை ஜெயம்**
தோற்றம்: 25 — 07 — 1962 அழிப்பு: 07 — 03 — 1987

**மாணிக்கம் ஜெயசிங்கம்**
தோற்றம்: 26 — 03 — 1966 அழிப்பு: 07 — 03 — 1987

ஆண்டு மூன்று சென்றாலும், உங்கள் அன்பும், பண்பும், நட்பும், வீரம் செறிந்த தன்னலமற்ற சேவைகளும் வரலாற்றில் எங்கள் மனதை விட்டு அகலாது.

நண்பர்கள்,
பகீரதன் குடும்பத்தினர்
யாழ்ப்பாணம் [12012]

### ★ சவூதி அரேபியா ★
### வேலைவாய்ப்பு - SOMC

| | | | |
|---|---|---|---|
| 1. | Civil Engineer | ... B.Sc. | — 1800 SR |
| 2. | Mech Engineer | ... B.Sc. | — 2500 SR |
| 3. | Electric / Electronic Engineer | ... B.Sc. | — 2500 SR |
| 4. | Telephone Technician | ... Dip | — 900 SR |
| 5. | General Electrical Technician | ... Dip | — 900 SR |
| 6. | Electronics Technician | ... Dip | — 900 SR |
| 7. | Auto Elecrical Technician | ... Dip | — 800 SR |
| 8. | Pump Mechanic | ... Dip | — 700 SR |
| 9. | General Technician | ... Dip | — 700 SR |
| 10. | Plumper | ... Dip | — 600 SR |
| 11. | Painter | | — 500 SR |
| 12. | Electrician | ... Dip | — 600 SR |
| 13. | Female Cleaners | ... Dip | — 400 SR |
| 14. | Sheet Metal Worker | | — 600 SR |
| 15. | Washer | | — 300 SR |
| 16. | Laundry Press Labourers | | — 700 SR |
| 17. | Laundry Labourer | | — 300 SR |
| 18. | Tailor | | — 600 SR |
| 19. | Labourers | | — 300 SR |

★ நேர்முகப் பரீட்சை 10 - 03 1990 கொழும்பில் நடைபெறும்.
● விபரங்களுக்கு நேரில் சந்தியுங்கள்.

A. தவச்செல்வம் (B.Sc. Hons)
நெல்லியான் றோட்,
சுழிபுரம்.
(சி-3959)

## சர்வதேச பெண்கள் தின கருத்தரங்கு

மார்ச் 8 சர்வதேசப் பெண்கள் தினத்தையொட்டி யாழ் பல்கலைக்கழக பெண்கள் சங்கமும் பெண்கள் ஆய்வு வட்டமும் இணைந்து நடத்தும் பெண்களும் அபிவிருத்தியும் ஒரு மீள்பார்வை என்ற கருத்தரங்கு இன்று வியாழக்கிழமைகாலை 9 - 30 மணிக்கு யாழ் பல்கலைக் கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறும்.

செல்வராசா அப்புலிங்கம் தலைமை வகிக்கும் இக்கருத்தரங்கில் சர்வமங்களம். கைலாசபதி, பேராசிரியர் என். பாலகிருஷ்ணன்சரோஜா சிவச்சந்திரன் சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

## இராமநாதன் கல்லூரிக்கு முதலிடம்

மருதனாமடம் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் இராமநாதன் கல்லூரியில் 19 வயதுக்குட்பட்ட 17 வயதுக்குட்பட்ட இரு அணிகளும் முதலிடத்தைப் பெற்றுள்ளன

### 50 தமிழ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாகியிருக்கின்றனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பாதுகாப்பு அமைச்சினால் விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

### இரண்டொரு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பவிக்கும் கஷ்டங்களைத் தீர்க்கவும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார். [உ]

### திருமலையில்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப்படையின் தடை சோதனை முகாம்களை இலங்கைப் பொலீஸார் பெறுப் பேற்றுள்ளனர்.

வடக்கு- கிழக்கு மாகாண சபைக்குரிய அலுவலகங்கள் உட்பட அரசு அலுவலகங்கள் மற்றும் வங்கிகளை பாதுகாக்கும் பொறுப்பை இலங்கைப் பொலீஸார் ஏற்றுள்ளனர் என்றும் கூறப்பட்டது. [உ-எ]

### New Science Academy

Kannathidy Road Jaffna
WEEKEND
Paper Class
Botany
Physiology
By
குணசீலன்
ஆரம்பம்:
10-03-90
குறிப்பு: 10-03-90க்கு பின்பு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.
[சி-3962]

### மெலித்தா கிறீஸ்தவ சென்ரர்

வேதாகம புத்தகங்கள், கிறீஸ்தவ பாடல் செய்திகள் ஒலிப்பதிவு செய்து கொடுக்கப்படும்.

வேத வசனங்கள் அடங்கிய அழகிய படங்கள் விற்பனைக்குண்டு.

**கில்ரன் ரெக்கோடிங் பார்**
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[12013]

### தட்டெழுத்தாளர் தேவை

யாழ் நகரில் உள்ள தனியார் நிறுவனமொன்றிற்கு ஆண் தட்டெழுத்தாளர் தேவை. தமிழ், ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கும் Stencil Cutting மொழி பெயர்க்கும் திறமை உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

20 - 03 - 1990 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

635, C/o உதயன் யாழ்ப்பாணம்.
[சி-3956]

### 18வது வட-இந்திய காசி யாத்திரை காஷ்மீர் சுற்றுலா

ஆரம்பம்: 03-05-90 (நான்கு வாரங்கள்)


கல்கத்தா, காயா, புத்த காயா, காசி, ஹரிதுவார், ரிஷிகேசம், ஜம்முகாஷ்மீர், டெல்லி-நியூ டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால் (Tajmahal) குல்மார்க் இன்னும் பல

**விநாயகா டூர்ஸ்**
அரசாங்கப் பதிவு பெற்றது 7753
நாகம்ஸ் தியேட்டர் காம்பிளக்ஸ், சுன்னாகம்.

125வது தென் இந்திய யாத்திரை
ஊட்டி ஸ்பெசல்
ஆரம்பம்: 10-04-90 முடிவு: 30-04-90

இராஜநாயகி தியேட்டர்
காங்கேசன்துறை.
அ. வி. அருணாசலம் (முகவர்)
[2743]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### ஸ்ரீமான் கிருஷ்ணன் கந்தசாமி

(கரம்பொன் கிழக்கு)

தோற்றம்: 24 - 06 - 1914 மறைவு: 19 - 03 - 1989

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

"திருத்தணிகை"
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.
[2734]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

**பொருள்:**

கயவரும் தேவரைப் போல் தாம் விரும்புகின்றவைகளைச் செய்து மனம் போன போக்கில் நடத்தலால், கயவர் தேவரைப் போன்றவர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
08-03-1990 க. பெ. இலக்கம் : 23

# எமது கல்வித் திட்டம்

"அண்மைக்காலங்களில் கல்வித் துறையிலே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டது உண்மைதான். ஆனாலும் அவை சமுதாயப் பார்வையுடையவையாக - சமுதாய தேவைகளைப் பூர்த்தி செய்பவையாக - அமையவில்லை"

யாழ். வேம்படி மகளிர் உயர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அதன் முன்னாள் அதிபர் திருமதி ஏ. இராஜரத்தினம் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த 40 ஆண்டு காலமாக கல்வித்துறையில் எத்தனையோ திட்டங்கள் புகுத்தப்பட்டன. ஆனால் அவை பூரண வெற்றியை அளிக்கத் தவறி விட்டன, அதன் பிரதி பலிப்பையே இன்று நாம் காண்கின்றோம்.

பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் அடிக்கடி கல்வித் துறையில் செய்யப்பட்ட மாற்றங்களும், நடைமுறைகளுக்குச் சாத்தியமாகாத் திட்டங்களுமே இந்த நிலைக்குக் காரணமாகும்.

1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் அறிமுகம் செய்த தொழில் முன்னிலைக் கல்வி 1977 இல் பதவிக்கு வந்த அரசாங்கத்தினால் மாற்றி அமைக்கப்பட்டது. இப்படி எத்தனையோ திட்டங்கள் அறிமுகமாகி சில வருடங்களில் மறைந்து விட்டன.

நடைமுறைச் சாத்தியமற்ற திட்டங்களும் பெரும் பணச் செலவில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

வரலாற்றுக் குறிப்பு என்னும் 8 பக்கப் படிவம் 1959 இல் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டது. அவை இன்றும் பாடசாலைகளில் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றன. பயன்பாடு ஒன்றும் இல்லை.

இதே போன்று ஆசிரிய சேவைப் புத்தகம் ஏராளமான பணச் செலவில் அச்சிடப்பட்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. அதுவும் பயன்பாட்டில் இல்லை.
மிக அண்மையில் தொடர் மதிப்பீட்டுக்கென ஏராளமான விளக்கக் கை ஏடுகள், படிவங்கள் அச்சிடப்பட்டன. கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

பல லட்சம் ரூபா செலவில் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டம் எந்தவித அபிவிருத்திக்கும் பயன்படவில்லை.

இப்படியான திட்டங்களைக் கொண்டுவரும் போது இத்துறையில் உள்ள கல்விமான்களின் ஆலோசனைகள் கட்டாயம் பெறப்படவேண்டும்.

மாணவர்களையும், ஆசிரியர்களையும், நாட்டையும் பரிசோதனைக் கூடத்தில் பயன்படும் "கினி பன்றி" (Guineapig) போன்று அரசியல் வாதிகள் கருதக் கூடாது.

எமது சமுதாயத்தில் 70 சதவீதமானோர் விவசாயம், மீன் பிடித்தல், சிறு கைத்தொழில், தோட்டத் தொழில் என்பவற்றில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆகவே கல்வித் திட்டங்கள் சமுதாயத்தின் பெரும்பான்மையினரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அமைய வேண்டும்.

## மல்லிகை வெள்ளிவிழா மலர் சனியன்று வெளியிடப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 8
மல்லிகை வெள்ளிவிழா மலர் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

எழுத்தாளர் வரதர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.எஸ். டிவகலால, யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம், "தகவம்" திரு வ. இராசையா, திரு. பூ. ஸ்ரீதரசிங் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பர்.

விழாவுக்கு திரு. தெளிவத்தை ஜோசப் தலைமை வகிப்பார் மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா மலரை வெளியிட்டு வைப்பார்.

திரு. அ. சோமசுந்தரம் பிள்ளை, திரு. எஸ். கே. மனோகரபூபன், திருமதி 'சுதாராஜ்' ஆகியோர் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வர்.

மல்லிகையில் கடந்த 25 ஆண்டுகளாக பணியாற்றி வரும் திரு. கா. சந்திரசேகரம், மற்றும் சம்பந்தன், திரு.ச. முத்துக்குமாரு, திரு. த. கலாமணி, திரு. த. இராசரெட்ணம், திரு. இரா. சிவச்சந்திரன் ஆகியோர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவர்.

இந்த விழாவில் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டி மண்டபமும் இடம் பெறும். "இன்றைய நவீன இலக்கிய கர்த்தாக்கள் தம் சமூகக் கடமையினின்றும் வழுவிவிட்டனரா?" என்ற தலைப்பில் இந்தப் பட்டி மண்டபம் நடைபெறும்.

டாக்டர் எம். கே. முருகானந்தன், வண. பிதா. ஆர். எம். சி நேசநாயகம், திக்குவல்லைக் கமால் மேமன்கவி ஆகியோர் கருத்துரை வழங்குவர். (ஒ)

### ஆலய புனரமைப்பு நிதி கிடைக்கவில்லை

புதுக்குடியிருப்பு மார்ச் 8
வன்செயல்களால் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம், புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோயில் ஆகியவற்றிற்கான புனரமைப்பு நிதி எதுவும் இதுவரை கிடைக்கவில்லை, இதனால் இந்த ஆலயங்களின், இவ்வாண்டு உற்சவங்கள் பாதிக்கப்படலாம்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றிஸ்வரர் ஆலயத்தின் திருப்பணிச் சபையின் தலைமை உறுப்பினர்களில் ஒருவரான திரு. சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.

(க-126)

### பெயர் மாற்றக் கோரிக்கை

புதுக்குடியிருப்பு மார்ச் 8
புதுக்குடியிருப்பு சி. சி. த. க. பாடசாலையின்பெயரை "ஸ்ரீ சுப்பிரமணியம் மகாவித்தியாலயம்" எனமாற்றும்படி இப் பாடசாலை அதிபர் கல்விப் பணிப்பாளரை வேண்டியுள்ளார் கல்லூரியின் விளையாட்டுப் போட்டி விழாவில் உரை நிகழ்த்தும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

(க-126)

### மின்மானி மோசடி

யாழ்ப்பாணம், மார்ச் 8
மின்மானியில் மாற்றம் செய்து மோசடி செய்த 12 பேர் கையும் மெய்யுமாக மாநாரசபைக்குழுவிடம் சிக்கினார்கள்.

தண்டமாக ஒவ்வொருவருக்கும் 2000 ரூபா விதிக்கப்பட்டது.
இந்தச் சோதனையின்போது யாழ் பீச்றோட்டைச் சேர்ந்த சில வீட்டுக்காரர்கள் அகப்பட்டனர்.

மற்றும் ஹோட்டல்கள் கடைகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இந்த மோசடிகள் செய்யப்பட்டிருந்தது. கண்டுபிடிக்கப்பட்டது.

(இ-3)

புலமைப் பரிசில் சோதனையில்

# சித்தியானோர் சிறந்த பாடசாலை அனுமதி பெறஅமைச்சு நடவடிக்கை

கொழும்பு மார்ச் 8
ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சிறந்த பாடசாலைகளில்அனுமதி பெற்றுக்கொடுக்கும் வேலைகள் இம் மாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகும். இதற்கான நடவடிக்கைகளை தற்போது கல்வி அமைச்சு மேற்கொண்டுவருகிறது.

இவ்வருடம் 16 ஆயிரத்து 379 மாணவர்கள் இத் தேர்வில் சித்தியடைந்து பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர். இப் புலமைப் பரீசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை மட்டும் இப்பாடசாலைகளில், 6ஆம் வகுப்பில் சேர்த்துக்கொள்வதெனக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதால் இவர்கள் அனைவருக்கும் பிரபல பாடசாலைகளில் அனுமதி கிடைக்கும் என கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது;

அகில இலங்கை ரீதியில் முதல் 8 இடங்களில் தெரிவான மாணவர்களை ஜப்பானில் சுற்றுப்பிரயாணம் செய்ய அழைத்துச் செல்லும் நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுவருகிறது.

அமைச்சினால் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை 150 ரூபாவில் இருந்து 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மாணவர் உதவித்தொகை பெறுவர்களின் எண்ணிக்கையை 500 ஆகவும் அமைச்சு அதிகரித்துள்ளது. இக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கு இம்முறை 3 ஆயிரத்து 870 சிங்கள மொழி மாணவர்களும், ஆயிரத்து 130 தமிழ் மொழி மூல மாணவர்களும் தகுதி பெற்றுள்ளனர். (க)

## மருதங்கேணி வைத்தியசாலை குறைபாடுகள் பற்றி சந்திப்பு

தாளையடி மார்ச் 8
வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள ஒரே ஒரு அரசினர் வைத்தியசாலையானமருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் பற்றி, செம்பியன்பற்று — மருதங்கேணி கிராமசேவையாளர் பிரிவு ஆரம்ப சுகாதாரசவனிப்பு நிலைய உறுப்பினர்கள் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. என். கனகசபையை நேரில் சந்தித்து பேசினார்கள்.

இயங்காமலிருக்கும் பற்சிகிச்சை நிலையத்தைஇயங்க வைப்பது, கட்டடப், ஊழியர் பற்றாக்குறை, போதியளவு மருந்து வகைகளை கையிருப்பில் வைத்திருப்பது ஆகியன குறித்து இச் சந்திப்பின் போது எடுத்துக் கூறப்பட்டது.

( இ-144 )

### 'நொறாட்' உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'நொறாட்' ஸ்தாபனம் உதவிகளை வழங்கியுள்ளது.

விதவைகள் புனர்வாழ்வுக்கும், விவசாய, மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் ஊடாக இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

(க-3)

### தெல்லிப்பழையில்

## சுகாதார சேவையாளர் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 8
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கிராமிய சுகாதாரத்தைப் பெறும் வகையில் சுகாதார சேவையாளர்களுக்கு தெல்லிப்பளையில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

கிராமிய மட்டத்தில் சுகாதார சேவைகள், சுகாதாரக் கல்வி, தாய் சேய் நலன் பேணல் ஆகிய துறைகள் நல்ல முறையில் செயல்படுத்தப்படாததையடுத்து யூ. கே. சிறுவர் பாதுகாப்பு நிதிய உதவியுடன்பயிற்சி அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்தத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 67 கிராமிய சுகாதார உதவியாளர்களுக்கும், 30 சுகாதார தரிசிப்பாளர்களுக்கும் மூன்று மாத குறுகியகால பயிற்சிகள் தெல்லிப்பழை சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டுவருகின்றன.

வைத்திய அதிகாரி திரு. கே.தேவேந்திரம் இந்தப் பயிற்சிகளை நடத்திவருகிறார். (க-3)

### நினைவில் இன்று

சர்வதேச மாதர் தினம்

வெளி மாவட்டங்களில் இருந்து

## இடமாற்றம் பெற்ற 12 ஆசிரியர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 8
வெளிமாவட்டங்களில் கடமையாற்றி யாழ் மாவட்டத்துக்கு 12 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி யிடப்பட்ட இந்த ஆசிரியர் இடமாற்றப்பட்டியல் யாழ் கல்வித் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சால் அனுப்பப்பட்ட இப்பட்டியல் விவரம் வருமாறு;

**மேற்கு மாகாணம்**

செல்வி வி. அரியரத்தினம் (கொழும்பு சாஹிறா முஸ்லிம் வித்தியாலயம்), செல்வி ஜே. நாகலிங்கம் [ஜோன் ம. வி- மட்டக்குளி), செல்வி கே. சந்திரசேகரம் (இராமநாதன்இந்துமகளிர்), திருமதி கே, குகமூர்த்தி இராமநாதன் இந்துமகளிர்),செல்வி பி, எஸ். அமிர்தரத்தினம் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்), திரு. ஆர். குணநாதன்(முகத்துவாரம் வித்தியாலயம்.

**மத்திய மாகாணம்**

கே. பஞ்சாட்சரம் (லிண்டுல சரஸ்வதி வி), செல்வி கே. யோகேஸ்வரி (தும்புலரி. வி), இளம்முருகன் லிண்டுல சரஸ்வதி வி.)

**வட-மேல்மாகாணம்**

செல்வி வாமதி (சிலாபம் பெர்னாண்டோ வி).

**சப்பிரமுவா மாகாணம்**

திருமதி வி. ஸ்கந்தராஜா (வறக்காப்பொல முஸ்லிம் வி.), செல்வி கே. ஜினந்தா (இரத்தினபுரி),

அத்துடன் மேற்கு மாகாணத்தில் இருந்து செல்வி ஆர். கலையரசி (செல்வி ஆன்ஸ் வத்தலை) இடமாற்றம் பெற்றுள்ளார்.

(இ-3 )

### விக்கிரக பிரதிஷ்டை

வட்டுக்கோட்டை மார்ச்-7
சிவகாமிசமேத ஸ்ரீ நடராசப் பெருமானின் சிவா விக்கிரகப் பிரதிஷ்டை இன்று 8 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் சுபமூகூர்த்த வேளையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்சிவா விக்கிரக நிர்மாண வேலையை இரா ஜாஸ்பதி, கலாகேசரி ,வடமகாண சித்திரக்கல்வி அதிகாரி திரு.ஆ. தம்பித்துரை மேற்கொண்டுள்ளார்.

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தனும் ஓய்வுபெற்ற வட்டுக்கோட்டைக் கொத்தணி அதிபர் திரு. நா.வேலுப்பிள்ளையும் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொள்ளுகிறார்கள். (க-161)

# வலி வடக்கு முடிக்குரிய காணி காணியற்றோருக்கு பங்கீடு

காங்கேசன்துறைமார்ச் 8
வலி வடக்குப் பகுதியில் உள்ள முடிக்குரிய காணிகளை காணியற்ற ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட உள்ளது.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பல பகுதிகளிலும் முடிக்குரிய காணிகள் பற்றைகள், செடிகள் நிறைந்து வீணாகக் கிடப்பதுடன் அவை சட்ட விரோதமாக அபகரிக்கப்பட்டும் வருகின்றன.

ஆகவே இக்காணிகளில் விபரங்களைத் திரட்டி சட்ட பூர்வமாக மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பலாலி தொழுந்சுங்கலட்டி என்னுமிடத்தில் 400 பரப்பு முடிக்குரிய காணியை 200 பேருக்கு 2 பரப்பு வீதம் பகிர்ந்தளிக்கவும், கீரிமலை நகுலேஸ்வரம் என்னுமிடத்தில் உள்ள முடிக்குரிய காணியை 59 பேருக்கு 1½ பரப்பு வீதம் பகிர்ந்தளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம் முடிக்குரிய காணிகளுக்கு அயலில் உள்ள காணியற்றவர்களும் வலி வடக்கு பிரதேசத்திலுள்ள காணியற்றவர்களும் இக்காணிகளைப் பெற விண்ணப்பிக்கலாமெனவும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தெரிவுகள் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

( க - 68 )

### ஷப்றா சுழற் கிண்ணம்

## மூன்று பிரிவுகளிலும் வேம்படிமகளிர் முதலிடம்

### இறுதிப் போட்டி 15 இல்

யாழ்ப்பாணம். மார்ச் 8
யாழ் - கோட்டக்கல்விப் பிரிவில் நடைபெற்ற உடற் பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் மூன்று பிரிவுகளிலும் வேம்படி மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றது.

யாழ் - கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இந்தப் போட்டி "ஷப்றா"வின் சுழற் கிண்ணங்களுக்காக நடைபெற்றது.

பெண்கள் பிரிவில் கீழ் பிரிவு, மத்தியபிரிவு, உயர் பிரிவு ஆகியவற்றில் வேம்படி மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றது.

யாழ் மாவட்டத்தின் சகல கோட்டங்களிலும் முதலிடம் பெறும் பாடசாலைகள் பங்குபற்றும் இறுதிப் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி யாழ் - மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

யாழ் - கல்வித் திணைக்கள உடற் பயிற்சிப் பிரிவு ஏற்பாடுகளை செய்துள்ளது.

( இ-3 )

### கருத்தரங்கு

வட்டுக்கோட்டை மார்ச் 8
வட்டுக்கோட்டை கொத்தணி பாடசாலைவிஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயல்திட்டக் கருத்தரங்கொன்று 10ஆம் திகதி சனிக்கிழமை வட்டு. இந்துக்கல்லூரியில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. விஞ்ஞான செயற்பாடுகள் பற்றிய இக்கருத்தரங்கிற்குச் சேவைக்கால விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் திருமதி அம்பலவாணர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

(க 161)

## வாசகர் திருமுகம்

### பயிற்சி வகுப்பு

கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் நியமனம் பெற்ற சகல ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கும் 3 வாரகால இலவச பயிற்சி வகுப்பு நடத்தப்படவில்லை. இவ் வகுப்புகளில் கற்பிப்பவர்களுக்கு இப் பயிற்சி வகுப்பு அவசியம். உரியவர்கள் இதைக் கவனத்தில் எடுப்பார்களா?

ஓர் ஆரம்ப ஆசிரியர்

### உடுப்பிட்டி உப தபாற்கந்தோர்

வடமராட்சி இராணுவ நடவடிக்கைக்கு முன் நீண்டகாலமாக உடுப்பிட்டி- வல்வெட்டித்துறை வீதியில் இரு பிரபல பாடசாலைக்கும் உடுப்பிட்டி சந்திக்கும் மத்தியில் அமைந்திருந்தது. ஆனால் இராணுவ நடவடிக்கையால் தபால் நிலையம் பாதிக்கப்பட்டது தபாற்கந்தோரின் பாதுகாப்பு கருதி தபாற்கந்தோர் பொறுப்பாளர் வீட்டிற்கு மாற்றப்பட்டது. அது ஒரு பிரதான இடமாக இல்லாததால் மக்கள் பெரும் சிரமத்தையும் பாராது பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் பாடசாலையில் குடிகொண்ட இந்திய இராணுவ வீரர்கள் வெளியேறிவிட்டனர். தபாற்கந்தோர் இருந்த கட்டிடம் பூரணமாக திருத்தப்பட்ட நிலையில் உள்ளது.

இனிமேலாவது பொதுமக்களின் நன்மை கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வந்து மீண்டும் பழைய (முன்பு இருந்த) கட்டிடத்தில் தபாற் கந்தோரை செயல்படவைக்கும்படி பொதுமக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

க. குணாளன்,
இ. ரவிபாலன்.
இமையாணன்.
உடுப்பிட்டி.

### மின் விளக்கு எரிவதில்லை

யாழ்ப்பாணம் கில்னர் லேனில் அதாவது செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தின் அருகாமையில் காணப்படும் ஒழுங்கையில் மின்கம்பங்களில் மின் விளக்குகள் எரிவதில்லை. இதனால் மாலை 6.30 மணியாகிவிட்டால் இவ் ஒழுங்கையில் இருள் சூழ்ந்துவிடும். இதனால் மக்கள் வரும் கஷ்டத்தை எதிர்நோக்குகிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்தால் விபத்துக்களை தவிர்க்கலாம்.

ஓர் அன்பன்.
யாழ்ப்பாணம்.

## கண்டதும் கேட்டதும்

வெளிநாடுகளில் இருந்து வரும் தபால்கள் அல்லது பார்சல்கள் உடைக்கப்பட்டு, அல்லது சேதமடைந்து இருந்தால் அவை உரியவர்களிடம் விநியோகிக்கப்படுவதில்லை. உரியவர்கள் நேரடியாக தபால் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு அவர்கள் முன்னிலையிலேயே அவை பாரம் கொடுக்கப்படுவது வழக்கம்.

சமீபத்தில் வடக்கில் உள்ள தபால் நிலையம் ஒன்றில் இச்சம்பவம் நடந்தது. சேதமடைந்திருந்த தபால் ஒன்றைப் பொறுப்பேற்க தபால் நிலையத்திற்கு அந்த விலாசத்திற்குரிய பெண் அழைக்கப்பட்டார். தபால் அதிபர் முன்னிலையில் அங்கு வைத்து தனது தபாலை அப்பெண் பிரித்த போது அதற்குள் இருந்து ஒரு முத்திரை விழுந்தது.

இந்த மோசடி தற்போது யாழ்ப்பாணத்தில் பரவலாக இடம் பெற்று வருகிறதாம்.

வெளி நாடுகளுக்கு தபால் அனுப்புவோர் முத்திரையின் மேல் பிசினைப் பூசி விடுகிறார்கள்.

பிசின் பூசிய முத்திரை மீது சீல் குத்தும்போது சீல் பிசின் மீதே பதிகின்றது.

வெளிநாடுகளில் உள்ளோர் முதல் அலுவலாக முத்திரையை சுழற்றி அதன்மேலுள்ள பிசினை கழுவுகின்றார்கள். தாம் வீட்டுக்கு அனுப்பும் அடுத்த கடிதத்துக்குள் அந்த முத்திரையை வைத்து அனுப்பி விடுகிறார்கள்.

அதே முத்திரைக்கு மீண்டும் பிசின் பூசப்படுகின்றது. எப்படி இருக்கிறது இந்த மோசடி? இங்கு உள்ளோர் எதற்கும் சளைத்தவர்கள் அல்லர் போல் தெரிகின்றது.

—செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காபூலில் சதிப்புரட்சி முறியடிப்பு

# பாதுகாப்பு அமைச்சர் தப்பி ஓட்டம்!

## நஜீப் கை ஓங்கியது

காபுல் மார்ச் 7

ஆப்கனிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லாவைக் கவிழ்க்கமேற்கொள்ளப்பட்ட சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல்டினை இச்சதிப்புரட்சியை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் நாட்டைவிட்டுஓடி விட்டதாக அறிவிக்கப்பட்டது.

காபூலில் உள்ள பாதுகாப்பு அமைச்சுக் கட்டடத்தை தனது படைகள் கைப்பற்றி விட்டதாக அதிபர் நஜிப் அறிவித்தார்.

வீதிச்சண்டைகள் இடம் பெற்றன என்றும் பல சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் என்றும் செய்திகள் தெரிவித்தன.

சதிப்புரட்சிநடத்திய அரசுப் புரட்சிப்படைகள் நடத்திய விமானத்தாக்குதலில் இறந்தவர்கள் பெரும்பாலோர் சிவிலியன்கள் என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

ஐநா.வில் உள்ள ஆப்கன் பிரதிநிதி தகவல் வெளியிடுகையில் இறந்தவர்களில் பெரும்பாலோர் ஆயுதப்படையினர் என்று சொன்னரர்.

ஜனாதிபதி நஜீப் பின்னர் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு செய்தி ஒன்றை விடுத்தார்.

பாகிஸ்தான் அரசுதான் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் டினையுடன் சேர்ந்து இச்சதிப் புரட்சியை நடத்தியது என்று டாக்டர் நஜீப் அப்போது குற்றஞ்சாட்டினார். (எ)

## சோவியத் யூனியனில் சொத்துரிமைச் சட்டம் மார்ச் 15 முதல் அமுல்

தனிநபர்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம் இம் மாதம் 15 ஆம் திகதி முதல் சோவியத் யூனியனில் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் சோவியத் நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே.

எப்படியாயினும் சோவியத் பிரசைகள் காணிகளை விற்கவோ அல்லது பிரிவிடுதல் செய்யவோ இச்சட்டம் அனுமதி வழங்கவில்லை. (எ)

## எவரெஸ்ட் மலை சுத்திகரிப்பு

### மூன்று நாடுகள் கூட்டாக நடத்தும்

பீகிங் வார்ச் 7

மலை ஏறியவர்கள் எவரெஸ்ட்சிகரத்தில் விட்டுச் சென்ற சழிவுப் பொருட்களை அகற்றும் பணியில் அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா, ஆகிய 3 நாடுகள் கூட்டாக ஈடுபட்டுள்ளன.

இம் மூன்று நாடுகளைச் சேர்ந்த மலை ஏறும் நிபுணர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் கைவிடப்பட்டுள்ள போத்தல்கள், படங்குகள் மற்றும் சழிவுப் பொருட்களை சேகரித்து மலையடிவாரத்துக்குக் கொண்டு வருவர்.

சுமார் இரண்டு தொன் சழிவுப்பொருட்களை சேகரிக்கத்திட்டமிடப்பட்டுஉள்ளது.

இந்த சுத்திகரிப்பு இயக்கத்துக்குவாஷிங்டனைச் சேர்ந்த மலை ஏறும் நிபுணர் ஜிம் மக்றேக்கர் தலைமை வகிக்கிறார்.

## காஷ்மீர் செல்ல அனுமதி கோரி பிரதமருக்கு ராஜீவ் கடிதம்!

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு விஜயம் செய்யப் போவதாக முன்னால் பிரதமரும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான ராஜீவ் காந்தி அறிவித்திருக்கிறார்.

இதற்கான அனுமதி கோரி திரு. காந்தி திரு. பி. வி. சிங்குக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத் தில்பதற்றநிலை நிலவுகிறது.

பெரும்பாலான நகரங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கிறது.

இந்த நிலையில் திரு. காந்தி காஷ்மீர் செல்ல மத்திய அரசு அனுமதிற்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இதனிடையில்-

காஷ்மீரில் உள்ள ஐ நா பிரதிநிதியின் அலுவலகத்தை மூடிவிடும் படி மத்திய அரசை பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அதல் வாய்பாயி கேட்டுள்ளார். (எ)


O/L 1990 (March)

மாணவர்களுக்கு

இலவச பயிற்சி பரீட்சை

1. பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்படும்.
2. இவ்வருடம் காலம் போதாததால் மாணவர்களுக்கு [கணிதம், விஞ்ஞானம்] இரண்டு பாடமும் மட்டுமே நடாத்தப்படும். பரீட்சை பின்போடப்பட்டால் அனைத்து பாடங்களும் நடைபெறும்.
3. O/L பரீட்சைக்கு புதிய பழைய பாடத்திட்டத்தின் படி தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றலாம்.
4. (March) 12 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத்தின் காரியாலயத்தில் சுட்டெண்ணை அடையாள அட்டை காட்டி பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. பரீட்சைக்கான நேர அட்டவணை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Free Exam Unit

விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

Red - No — 12141

[சி-3493]



கொம்பியூட்டர் கல்வி

BASIC PROGRAMMING COURSE

Commencing on: 07 - 03 - 1990 (Wed & Fri) 8.30 a.m.

10 - 03 - 1990 (Sat & Sun) 8.30 a.m.

IDP COMPUTER CENTRE

342, K.K.S. Road, Jaffna.

(சிவன் கோவிலடி) (சி/3484)



தான்சன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட் — தெல்லிப்பழை

O/L WEEK END CLASSES DEC — 90

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

வகுப்புநேரம்: காலை 7 மணிமுதல் பி.ப. 2 மணிவரை

ஆரம்பம்: 10-03-90 (சனி) காலை 7 மணி

நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — 7 மணி | — J. R. சூரி |
| கணிதம் | — 8 மணி | — மதி |
| தமிழ் | — 9 மணி | — கணேஷ் |
| கணிதம் | — 10 மணி | — மகேந்திரன் |
| சமூகக்கல்வி | — 11 மணி | — திருக்குமார் |
| ஆங்கிலம் | — 12 மணி | — ஹரிதாஸ் |
| வர்த்தகம் | — 1 மணி | — வரதன் |

★ தூர இடத்து மாணவரின் நலன் கருதி இவ்வாண்டு முதல் ஆரம்பிக்கின்றோம்.

[சி-3433]



91 A/L விஞ்ஞான மாணவர்கட்கு

★ அசேதன இரசாயனம் ★

10 03 - 90 சனி, 2-30 p.m Sat, Sun 2 30 p.m

ஆசிரியர்: Mr நாகரெட்ணம் B. Sc.

மணல் தறை லேன், கந்தர்மடம்

(சி/3498)



தரமுயர்ந்த வாகன உதிரிப் பாகங்களுக்குத் தலை சிறந்த இடம்

டக்லஸ் அன்ட் சன்ஸ்

வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட தரமுயர்ந்த டயர்கள், பட்டரிகள் மற்றும் பல்வேறு மோட்டோர் வாகன உதிரிப் பாகங்களை நம்பிக்கையுடன் மொத்தமாகக் கொள்வனவு செய்வதற்குத் தலைநகரில் தலைசிறந்த இடம் டக்லஸ் அன்ட் சன்ஸ்.

மோட்டோர் வாகன உரிமையாளர்கள் நம்பிக்கையோடு தேடி வாங்கும் தரச்சிறப்பு வாய்ந்த டயர்கள், பட்டரிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் அனைத்தையும் நீங்கள் டக்லஸ் அன்ட் சன்ஸில் நியாயமான விலையில் பெறலாம்.

பின்வரும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் டக்லஸ் அன்ட் சன்ஸ் லிமிட்டெட் விநியோகிக்கிறது.

— இன்டரப் மற்றும் ஜி. ரி. சுப்பர் டயர்கள்
— குளோபல் மற்றும் றொக்கட் பட்டரிகள்
— என். ஜி. கே. ஸ்பார்க் பிளக்
— கே. வை. பி. சொக் அப்சோபர்கள்
— மிற்சுபோஷி விசிறிப் பட்டிகள்
— ஈடில்வீஸ் ஹோர்ன்கள்

நம்பிக்கையோடு நாடுங்கள்:

டக்லஸ் அன்ட் சன்ஸ் லிமிட்டெட்

221, பஞ்சிகாவத்தை வீதி, கொழும்பு - 10.

தொலை பேசி: 546895/436668/434937


ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15-03-1923

மறைவு: 17-02-1989

திதி: 08-03-1990

அமரர்

திரு. தம்பையா சுப்பிரமணியம்

[மொனறாகலை மணியம்]


எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காயிருந்து எம்மை அன்புடனும் ஆதரித்து உலகினிலே ஒளிபெறச் செய்து எம்மையெல்லாம் நீங்காத் துயரில் ஆழ்த்திவிட்டு சென்றீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [2707]

6ஆம் மாத நினைவஞ்சலி



திரு. வி. ரங்கநாதன் (ரங்கன்)

தோற்றம்: 10 - 11 - 1966

மறைவு: 14 - 09 - 1989

மாதங்கள் ஆறு சென்றதையா!
எங்கள் உள்ளம் துடிக்குதய்யா
எம் இனத்தின் விடிவிற்காக நீர்
உடம்பை அர்ப்பணித்த தியாகத்திற்கு
விடிவு உண்டு.

உன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

தாய், சகோதரி, உற்றார், உறவினர்.

கிளுவனை,
களபூமி, காரைநகர். [2729]

ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி ஞானமலர் சிவலிங்கம்

வையகத்தில்: 12 - 01 1934

வானகத்தில்: 17 - 02 - 1989

திதி: 08. 03. 1990

எம் இதயதீபமே! நீங்கள் மறைந்து ஒரு வருடம் ஓடிவிட்டதே! இன்னமும் ஆறவில்லை. எங்கள் மனம் ஓயவில்லை எங்கள் கண்ணீர் எமது குடும்பத்தில் ஒளிவிளக்காய் வழி நடத்திய அன்புத் தாயே உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள் மருமக்கள்,
தாய், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

ஜெயம்,
சூராவத்தை,
சுன்னாகம். (2660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசுக்கு எச்சரிக்கை:

# கொலைப்படையை கலையாவிடின் அமெரிக்க உதவி கிடையாது

வாஷிங்டன், மார்ச் 8

சிங்களத் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கொலைகளைச் செய்து வரும் அரசு ஆதரவுப் படைகளை உடனடியாக அரசு கலைக்க வேண்டும். இல்லையேல் இலங்கைக்கு அளித்து வரும் உதவிகளை அமெரிக்கா நிறுத்த வேண்டி வரும்.

— இப்படி அமெரிக்க காங்கிரஸின் ஆசிய விவகாரக் குழுத் தலைவரான செனட்டர் ஸ்டீபன் சொலார்ஸ் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

ஆசிய விவகாரக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

''அரசு இராணுவத்தைச் சேர்ந்த ஒரு படை கொலைப் படையாக மாறி வன்முறையைக்கட்டவிழ்த்து விடுகிறது.

''இதை இலங்கை அரசு அனுமதித்திருப்பதை என்னால் ஏற்க முடியாது.

''இலங்கையில் ஒவ்வொரு வாரமும் 40 முதல் 50 பொது மக்கள் வரையில் அரசு ஆதரவு கொலைப்படையால் கொல்லப்படுகின்றனர்.

கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 2ஆயிரம் பேர் வரை இப்படிக் கொல்லப்பட்டுள்ளனர்.

''இவர்கள் ஜே. வி. பி. என்று சந்தேகிக்கப்படுபவர்கள் அல்லது ஜே. வி. பி. ஆதரவாளர்களாவர் என்று ஆசிய விவகாரக்குழு கூறியிருக்கிறது.

''இதனால் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவு கொடூரங்கள் நடைபெறும் இலங்கைக்கு அமெரிக்கா ஏன் தனது உதவிகளை நிறுத்தக் கூடாது?''

— இப்படி செனட்டர் ஸ்ரீபன் சொலார்ஸ் கேள்வி எழுப்பினார்.

தற்போது இத்தகைய மனிதப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த இலங்கை அரசு முற்பட்டுள்ளது என்று கூறிய செனட்டர் ஜெல்லி, அது தொடர்பான தனது நடவடிக்கைகளை இலங்கை அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அமெரிக்கா இலங்கைக்கு ஆண்டுதோறும் சுமார் 120 கோடி ரூபா (இலங்கைப் பணத்தில்) பொருளாதார உதவியும் சுமார் 40 லட்சம் ரூபா (இலங்கை ரூபா) வுக்கு இராணுவ உதவியும் வழங்கி வருகிறது. (உ—எ)

## இந்தியாவுக்கு வரதர்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

திரு. வரதராஜப்பெருமாளின் இச்செயலுக்கு இந்தியா ஆதரவளிக்கவில்லையானால், அல்லது அவருடன் கூட்டுச்சேர்ந்து நடவடிக்கை எடுக்கவில்லையானால், திரு. வரதராஜப்பெருமாளுக்கு வழங்கியுள்ள சகல பாதுகாப்புக்களையும் இந்தியா வாபஸ் வாங்க வேண்டும்.

அத்துடன் இலங்கையில் இருந்து திரு. வரதராஜப்பெருமாளை இந்தியா அழைத்துக்கொள்ள வேண்டும்.

பெருமாளையும் அவரது எடுபிடிகளையும் இந்தியாவுக்கு அழைத்துக்கொண்டால் நல்லது என்று நான் இந்தியத் தூதரிடம் கூறிவிட்டேன்.

இதனைத் தனது தலைவர்களிடம் தெரிவிக்க இந்தியத் தூதர் இந்தியா செல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தனது பாதையின் முடிவு வந்துவிட்டது என்பதை திரு. வரதராஜப்பெருமாள் உணர்ந்து கொண்டார்.

அமைதிப்படை மார்ச் 31 அன்று அல்லது அதற்கு முன்னரோ திரும்பிவிடும். திரு. வரதராஜப்பெருமாளும் அவர்களுடன் ஓடிவிடுவார்.

அம்பாறையில் இருந்து அமைதிப்படை விலகிய பின்னர் தமிழ் தேசிய இராணுவத்தின் முகாம்களை அங்கு திரு. வரதராஜப்பெருமாள் நிறுவினார். அப்படிப்பட்ட இரண்டு முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்; ஆயுதங்களை அவர்கள் எடுத்தனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இளைஞர்களைக் கட்டாய இராணுவ சேவைக்கு ஈ. பி. ஆர். எல். எவ். திரட்டியது.

சட்டவிரோத தமிழ் தேசிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டது பற்றிய உண்மைகள் வெளிவந்தன. அதைத் தொடர்ந்து அரசாங்கத்துடனான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தொடர்புகள் முறிவடைந்தன.

அரசுக்குத் தெரிந்தே விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தினர் என்று அவர்கள் எண்ணினர்.

சுதந்திரக் கட்சி எம். பி. தர்மசிறி சேனநாயக்கா:-

தமிழ் தேசிய இராணுவத்திடம் இருந்து ஆயுதங்கள் எப்போது களையப்படும்?

அமைச்சர் விஜேரத்னா:- அமைதிப்படை போனபின்னர் அவர்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படும். அமைதிப்படையுடன் அவர்களும் ஓடுகிறார்கள் அவர்களுக்குப் பின்னால் நாம் ஓடவேண்டியதில்லை.

அமைதிப்படை போனபின்னர் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் திருமலையில் இருப்பாரா என்பதைப் பொறுத்துஇருந்துதான்பார்க்கவேண்டும்.

அவரை திருமலையில் அல்லது இலங்கையில் இருக்கும்படி சவால் விடுகிறேன்.

காட்டுக்குப் போகப்போவதாக அவர் சொல்கிறார். அவரைப் பார்த்துக்கொள்ள எமது உளவாளிகள் அங்கும் இருக்கிறார்கள்.

இடதுசாரிக் கட்சிகள், தொழிற் சங்கங்களுக்குள்ளும் எமது உளவாளிகள் ஊடுருவி உள்ளனர்.

19 யோசனைகளை ஈ. பி. ஆர். எல். எவ். முதலமைச்சர் கருணாநிதியிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்தியாவின் ஒரு மாநிலமாக இலங்கையை அவர்கள் நினைத்துக் கொண்டார்களா?

அவர்களுடைய கோரிக்கைகளை நாம் ஏற்கவேண்டும் என்றால் அவர்கள் களனி ஆற்றில் குளித்துவிட்டு வரவேண்டும்.

திரு. தர்மசிறி சேனநாயக்கா:- வடக்கு – கிழக்கு மாகாண சபை கலைக்கப்படுமா?

அமைச்சர் விஜேரத்னா:- பொறுமையாக இருங்கள். சரியான நேரத்தில் நாம் சொல்வோம். அரசியல் சட்டப்படி நாம் போகின்றோம். கிரகங்கள் இடமாறினால் அவற்றை ஒழுங்காக்கிவிட்டு அதைச்செய்வோம்.

இரண்டாவது முறையாக நாம் தவறு செய்யமாட்டோம் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

நிலக்கண்ணி வயல்கள், பொறிக்கிடங்குகள் எல்லாவற்றையும் நாம் கடந்து வந்துள்ளோம். மனிதாபிமானத்தை ஜனாதிபதி கைவிடமாட்டார்.

தமிழீழ பிரகடனம்செய்துவிட்டு ஏன் நாடாளுமன்றம் வந்தீர்கள் என்று மதிய போசன வேளையின் போது ஈ.பி.ஆர்.எல்.எவ். எம்.பி. ஒருவரைக் கேட்டேன்.

அதற்கு அவர் 'நாம் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.' என்று சொன்னார்.

அவர்களின் எம்.பி.க்களே அவர்களுடன் இல்லை. மூழ்கும் கப்பலில் இருந்து அவர்கள் வெளியேறுகிறார்கள்.

அரசில்வாழ்வின் எல்லைக்கு வந்துவிட்டவர்களின் முட்டாள் தனமான நடவடிக்கைகளுக்கு பதிலாக நாமும் நடக்கக்கூடாது. தேவையின்றி பதற்றப்படக்கூடாது. சகிப்புத்தன்மையாக இருப்போம். (உ—எ)

## எழுத்துச் சீர்திருத்தம் பாடசாலைகளில் வருமா?

### இன்னும் தீர்க்கமான முடிவில்லை

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் கல்வி போதனைக்கு எழுத்துச் சீர்திருத்தத்தை பின்பற்றுவதா என்பது குறித்து தீர்க்கமான முடிவு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்பற்றி போதனைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கும் உத்தரவு ஒன்று சகல மாவட்ட கல்வி திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது.

ஆனால் இந்த உத்தரவு வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கல்வித் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டிருப்பதால், அதனைப் பின்பற்ற மாவட்ட கல்வித் திணைக்களங்கள் தயக்கம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபையின் நிர்வாகம் ஸ்தம்பிக்கும் சூழ்நிலை ஏற்பட்டு வரும் இவ்வேளையில், கல்வி போதனை தொடர்பாக பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் உத்தரவு ஒன்றை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் பின் நிற்பதாகக் கூறப்பட்டது. (உ—9)

## புலிகளுடனான போரில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகப்பெரிய இராணுவத்தைத் தோற்கடித்து விட்டோம் என்ற பெருமிதத்துடன் இப்படி திரு. மாத்தயா கூறினார்.

இந்திய இராணுவத்துடன் கடந்த இரண்டரை வருடங்களாக நடந்த போர் வடமாகாணத்தின் பழமை வாய்ந்த சமூகத்தில் வகுப்பு மற்றும் ஜாதி தடைகளைஉடைத்தெறிய உதவிஇருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

கேள்வி: வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஒரு கட்சி ஆட்சியை விடுதலைப்புலிகள் திணிக்குமா?

மாத்தயா:- அது எங்கள் நோக்கமல்ல. தேர்தல்கள் நடக்கும். அவை சுதந்திரமான, நேர்மையான தேர்தல்களாக இருக்கட்டும். மக்கள் முடிவுசெய்யட்டும். நாங்கள் பல கட்சிகள் கொண்ட அமைப்பைத்தான் விரும்புகிறோம்.

போர் முடிந்துவிட்டது. நங்கள் எங்களுடைய வாழ்க்கையையும் சமூகத்தையும் சீரமைக்க வேண்டும்.

கேள்வி: விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடக்கும் பேச்சுக்கள், இந்தியத் துருப்புக்களை இலங்கையிலிருந்து வெளியேற்றி, தமிழர் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாக்க, இருதரப்பினரும் கொண்டுள்ள விருப்பத்தினால் ஏற்பட்டதா?

மாத்தயா: இப்போது விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாஸா அரசுக்கும் இடையே அடிப்படை முரண்பாடுகள் இல்லை. இரு தரப்பினருமே இந்தியப்படையினர் வெளியேறுவதை விரும்புகிறோம். ஆனால் தமிழர்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் அல்லாது அரசியல் ரீதியில் தீர்வுகாண்பதே எங்களின் அணுகுமுறை—என்றார்.

இப்பேட்டியின்போது விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் திரு. யோகி, டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் திரு. மாத்தயாவுடன் கூட இருந்தனர். (உ—எ)

## மாத்தயா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னிடம் அவர்கள் எடுத்துரைப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை—

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜாவுக்கும் இடையிலான முதற்கட்டப் பேச்சுக்கள் பூர்த்தியடைந்து விட்டதாகவும் கொழும்பில் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பேச்சுக்களுக்காக கொழும்புக்கு வந்த விடுதலைப்புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன்பாலசிங்கம் தொடர்ந்து கொழும்பிலேயே தங்கியிருக்கிறார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வட்ட மேசை மாநாட்டில் பார்வையாளராகப் பங்குபற்றுவதற்காக திரு. யோகரட்ணம் யோகி மீண்டும் கொழும்புக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. (உ)

## சுத்தானந்த பாரதியார் காலமானார்

சென்னை, மார்ச் 8

யோகிராஜ் சுத்தானந்த பாரதியார் நேற்றுக் காலை சிவகெங்கை அருகே சோழபுரத்தில் உள்ள அவரது தவக்குடிலில் காலமானார்.

93 வயதான அவர் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு இருந்தார்.

50ஆயிரம் வரிகளைக் கொண்ட பராசக்தி மகாகாவியம் எழுதியதற்காக 1984ஆம் ஆண்டு சுத்தானந்த பாரதியாருக்கு ராஜராஜன் விருது வழங்கப்பட்டது.

இவர் கடந்த 25ஆண்டுகளாக மௌன விரதம் அனுஷ்டித்து வந்தார். இவர் விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார்.

சுப்பிரமணியபாரதியார், வவேசு ஐயர், சுப்பிரமணிய சிவா ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். அன்னாரின் பூதவுடல் இன்று சோழபரத்தில் நல்லடக்கம் செய்யப்படுகிறது (ஓ—எ)

## சாவகச்சேரியில் விபத்து

யாழ்ப்பாணம், மார்ச்.8

சாவகச்சேரியில் எரிபொருள் பொருளுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் படுகாயமடைந்தார்.

நேற்றுக் காலை சாவகச்சேரி பஸ் நிலையம் முன்பாக இச்சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரியைச் சேர்ந்த பி.ராஜகுலசிங்கம் (வயது 52) என்பவரே படுகாயமடைந்தவராவர். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ—10)

## காண்டீபன்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புகழ்பூத்த போராளிகளுள் ஒருவரான கேடில்ஸின் சகோதரர் காண்டீபன் என்பது குறிப்பிடத்தக்கது.

1987 அக்டோபரில் இந்தியப் படையுடனான மோதல் ஆரம்பித்த பின்னர், யாழ் நகரிலும் அதை அண்டிய பல பகுதிகளிலும் இந்தியப் படைக்கு எதிராக தீரத்துடன் கெரில்லா போரில் ஈடுபட்டவர் காண்டீபன்.

பல சந்தர்ப்பங்களில் மயிரிழையில் உயிர் பிழைத்த போதும் இந்தியப் படைக்கு எதிரான போரில் தொடர்ந்தும் சளைக்காமல் முழு மூச்சுடன் ஈடுபட்டவர் அவர் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவரான காண்டீபன், இந்துக்கல்லூரி சமூகத்தினால் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

கடந்த ஞாயிறன்று யாழ் ஆஸ்பத்திரி வீதியில் காண்டீபனும் அவரது சகா ஒருவரும் மோட்டார் சைக்கிளில் சென்றபோது மினிபஸ் ஒன்றினால் மோதுப்பட்டு விபத்துக்குள்ளானதில் காண்டீபன் படுகாயமடைந்தார் என்பது தெரிந்ததே. (உ)

## கண்டாவளை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் வரை பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

கண்டாவளையில் நாளை நடைபெறும் இறுதிக் கிரியைகளில் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. மாத்தயா, திரு. யோகி ஆகியோர் பங்குபற்றக்கூடும் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தன. [உ]

## "ஈழப்பிரகடனம்" குறித்து கருணாநிதி நிலை என்ன

### வாழப்பாடி ராமமூர்த்தி கேள்வி

கோயம்புத்தூர், மார்ச் 8

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் சுதந்திரத் தமிழீழப் பிரகடனம் குறித்த தனது நிலையை முதலமைச்சர் கருணாநிதி விளக்க வேண்டும்.

–இப்படி தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டுக்கொண்டார்.

செய்தியாளர்களிடம் பேசுகையில் திரு. இராமமூர்த்தி சொன்னதாவது;

எதிர்க் கட்சி வரிசையில் இருந்தபோது தி. மு. க. தனித் தமிழீழத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்தது.

தனித் தமிழீழம் பற்றிதற்சமயம் ஈ. பி. ஆர். எல்.எவ். அறிவித்துள்ளது. இதைத் தி. மு. க. ஆதரிக்க வேண்டும் என்பதே இயல்பு.

விடுதலைப்புலிகளுக்கு கருணாநிதி மறைமுக ஆதரவை அளித்ததால்மற்றப்போராளிகள் கருணாநிதியை ஆதரிக்கவில்லை.

எனவே இலங்கைப் பிரச்சினையில் கருணாநிதியின் முயற்சி எதிர்மறையாகி வருவதில் ஆச்சரியமேதுமில்லை.

தமிழர்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு உறுதியாகி சகஜநிலை ஏற்படும் வரை அமைதிப் படை விலகக் கூடாது.

இதற்கு முன்னதாக அமைதிப்படை விலகினால் அங்கு இரத்தக் களரி ஏற்படுத்துவதுடன் அங்குள்ள தமிழர்கள் தமிழகத்துக்குக்குடிபெயர்ந்து விடுவர்– என்றார் அவர்

## அதிபர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். நகரையும் அதை அண்டிய பகுதியையும் சேர்ந்த இரு பிரபல பாடசாலைகளின் அதிபர்களுக்கு இடமாற்ற உத்தரவு வந்திருக்கிறது.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் -

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஏ. பஞ்சலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய அரசின் கல்வி அமைச்சின் அனுமதியுடனே வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. ]உ

## 2 நேர பாடசாலைத் திட்டம் அடுத்த தவணையிலிருந்து

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். மாவட்ட பாடசாலைகளை இரண்டு நேரமாக்கும் திட்டம் அடுத்த தவணையில் இருந்தே அமுலுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிபர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து அவர்களது கருத்துக்கள் பெறப்பட்ட பின்னரே இதனை அமுல்படுத்த முடியும் என்றும் கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். [இ—10]

## எரிபொருள் நிலைய "பம்ப்" முத்திரையிடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச், 8

யாழ். மாவட்ட எரிபொருள் நிலையங்களில் உள்ள பம்ப்களை சரிபார்த்து அவற்றுக்கு முத்திரையிடும் வேலைகள் ஏப்ரல் மாதம் அளவில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 9 வருடங்களாக வட பகுதியில் யாழ். செயலக அளவை நிலுவைப் பகுதி எரிபொருள் விற்பனை தொடர்பான எந்தவொரு பம்செட்டுக்களுக்கும் முத்திரை பதிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ—10]

## யாழ் இந்து வெற்றி

யாழ் இந்துக் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி இனிங்சால் வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய யாழ் இந்துக்கல்லூரி 8 விக்கெட் நஷ்டத்திற்கு 199 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. ஜெயராஜ் 57, கோபிராஜ் 45, கபிலன் 18, நரேந்திரன் 17 ஓட்டங்களை பெற்றனர். செந்தில்குமரேசன், அன்பழகன் ஆகியோர் தலா 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

ஹாட்லிக் கல்லூரி தனது முதல் இனிங்சில் 47 ஓட்டங்களைப் பெற்றது. ஜீவமுருகந்தன் 17 ஓட்டங்களை எடுத்தார். நரேந்திரன், பிரபாகரன் இருவரும் நன்நான்கு விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய ஹாட்லிக் கல்லூரி 105 ஓட்டங்களைப்பெற்றுஆட்டமிழந்தது. ராஜகோபன் 28, சிவகுமாரன் 23, சதீஸ் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பிரதீபன் 6 விக்கட்டுக்களையும் சசிசேகரன் 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப் போட்டிக்கான சிறந்த பந்து வீச்சாளருக்கான சுற்றுக்கிண்ணத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் அன்பளிப்பு செய்திருந்தனர். இக் கிண்ணத்தை யாழ் இந்துக்கல்லூரியின் பிரதீபன் பெற்றுக் கொண்டார்.

ஹாட்லிக் கல்லூரி கடந்த 6 வருட காலத்துக்குப் பின்னர் இப்போதுதான் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

## அந்தாதி வெளியீடு

யாழ்ப்பாணம் மார்ச் 8

''திண்ணபுர அந்தாதி'' நூல் வெளியீட்டுவிழா நாளை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொள்ளுப்பிட்டி புடவைக் கைத்தொழில் கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் இவ் விழாவுக்கு அருள் நெறித் தொண்டர் திரு. கே. கே. சுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

## கிளிநொச்சியில் . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் அன்ரன் பாலசிங்கம், முன்னணியின் செயலாளர் யோகி, வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் சந்திரன், கிளிநொச்சி பிராந்திய பொறுப்பாளர் கோபி, விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலரும் உரையாற்றுவார்கள்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசார அலையினால் கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் நிர்மாணிக்கப்பட்டுள்ளகவின் கலைக் கல்லூரியை திரு. மகேந்திரராஜா மாத்தயா அன்று (சனிக்கிழமை) திறந்து வைப்பார். (ஓ—76)

## மெய்வல்லுநர் போட்டி

நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு அதிபர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் நடைபெறும். வடமராட்சி கோட் .க்கல்விஅதிகாரி திரு. பொ. வீரபத்திரன் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறார்.

DIPLOMA IN NURSING தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு உகந்த வகையில்

★ செய்முறைப் பயிற்சி ★ பார்மஸி பயிற்சி ★ ஆங்கில வகுப்புக்கள் அடங்கியது

பிரபல விரிவுரையாளர் குழுவினால் நடாத்தப்படுகிறது.

புதிய பிரிவில் சேர உள்ளவர்கள், விபரங்களுக்கு:-

NORTH CEYLON TECHNICAL INSTITUTE,
14, St. Peters Lane, Hospital Road, JAFFNA.

(இ—3961)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKET EMBALMING
FUNERAL COACHES
No: 563, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.


# உதயன்

08 - 03 - 1990 வியாழக்கிழமை


அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே இருக்கும் அன்பன்
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# தமிழகம் செல்லும் ஈழக் குழுக்கள் குறித்து கலைஞருடன் தூதர் பேச்சு!

## நேற்று சென்னையில் நடந்தது

கொழும்பு. மார்ச் 8

வடக்கு, கிழக்குப் பகுதியிலிருந்து இந்தியப் படை வெளியேறும் போது அவர்களுடன் பல தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் தமிழகம் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றதல்லவா?

இந்தப் பிரச்சினை குறித்து சென்னையில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியுடன், இலங்கைக்கான இந்தியத் தூதர் திரு. எல். எல். மெஹ்ரோத்ரா கலந்தாலோசனை நடத்தியதாக நேற்றுக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

சென்னை சென்றிருக்கும் தூதுவர் மெஹ்ரோத்ரா கலைஞர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்து சுமார் அரை மணி நேரம் ஆலோசனை நடத்தினார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ்க் குழுக்களிடையே நிலவும் வேறுபாடுகளைக் களைவது குறித்தே இச்சந்திப்பின்போது பேசப்பட்டதாக இந்திய வானொலி தெரிவித்தது.

இதேவேளை —

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், அவர்களது ஆதரவாளர்களும், உறவினர்களுமாக சுமார் ஐநூறு பேர் வரை ஏற்கனவே இந்தியா சென்றிருப்பதாகவும் —

மேலும் ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல், எவ்., ரெலோ போன்ற இயக்கங்களின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அவர்களின் உறவினர்கள் ஆகியோருமாக சுமார் ஐயாயிரம் பேர் வரை விரைவில் தமிழகம் செல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டதாகவும் —

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன,

இதனால் எழக்கூடிய சிக்கல்கள் குறித்துப் பேசவே தூதர் மெஹ்ரோத்ரா சென்னை சென்றதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. [உ]

## பயிலுநர் ஆசிரியர் சான்றிதழ் பிழை என்றால் நியமனம் ரத்தாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட உள்ளவர்கள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பித்த சான்றிதழ்கள் பிழையானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களது நியமனம் ரத்துச்செய்யப்படும்.

பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட உள்ளவர்களுக்கு வழங்கப்பட உள்ள தற்காலிக நியமனக் கடிதத்தில் இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நியமனக் கடிதத்தின் படி பயிலுநர் ஆசிரியர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

★ மாகாண கல்விப்பணிப்பாளரின் பணிப்புரைக்கிணங்க முன் சேவைப் பயிற்சி வழங்கப்படும்.

★ உரிய காலத்தில் நியமனக் கடிதம் வழங்கப்படும்.

## விசேட சுதந்திர படையணி அமைக்க அரசு முடிவு!

அரசுக்கு எதிரான சக்திகளின் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் விசேட சுதந்திர படையணி (Brigade) ஒன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விசேட படையணியின் தலைவராக இராணுவப் பிரிகேடியர் ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

இப்படையணியில் கமாண்டோக்கள் இடம்பெறுவர். தேவையேற்பட்டால் இவ் விஷேட படையணி வடக்கிலும் கிழக்கிலும் பொலீஸ் கொமாண்டோ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இராணுவவட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## இந்திய செஞ்சிலுவை வைத்தியசாலை மூடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 8

காங்கேசன்துறையில்இயங்கி வந்த இந்திய செஞ்சிலுவைச் சங்க வைத்தியசாலை நேற்று மூடப்பட்டது.

காங்கேசன்துறையில் இருந்து அமைதிப்படையினர் விரைவில் விலகிச் செல்ல இருப்பதை அடுத்தே இந்த வைத்தியசாலையும் மூடப்பட்டதாகக் கூறப்பட்டது (ஒ)

## இராணுவத் தொண்டர் படை சேவைக்கு அழைப்பு!

கொழும்பு, மார்ச் 8

இராணுவச் சட்டத்தின் கீழ் இராணுவத் தொண்டர் படையின்தீவிர உறுப்பினர்களைச் சேவைக்கு அழைத்திருக்கும் ஜனாதிபதியின் பிரகடனத்தை சபாநாயகர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வாசித்தார்.

நாட்டில் சிவில் குழப்பங்கள் ஏற்படாமல் தடுப்பதும்ட

அப்படி ஏற்படின் அதனை அடக்குவதுமே ஜனாதிபதி இப்பிரகடனத்தைப் பிறப்பித்ததற்குக் காரணம் என்று சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச் முஹம்மத் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (உ-எ)

## மகளிர் தின விழா

கொழும்புத்துறை, மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட சிக்கனக் கடன்வழங்கு கூட்டுறவுச் சமாசம் ஏற்பாடுசெய்துள்ள மகளிர் தினவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல் கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும்.

மகளிர் குழுத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீஸ்வரன் தலைமையில் இவ்விழா நடைபெறும். (இ-30)

## கொக்குவில் மக்களுக்கு 10, 11ஆம் திகதி நிவாரணம்

கொக்குவில் மத்தி, கொக்குவில் கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுகளுக்கான மீளக் குடியமர்தல் நிவாரணம் முறையே 10ம், 11ம் திகதிகளில் வழங்கப்படும்.

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் இந்த நிவாரணம் வழங்கப்படும். (உ-எ)

## பருத்தித்துறை வங்கியிலும்

பருத்தித்துறை, மார்ச் 8

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில் நாளைய மறுதினம் சனிக்கிழமைஇரண்டாம்கட்ட மீளக் குடியமர்வு நிவாரணம் வழங்கப்படும்.

தொண்டமானாறு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 621 குடும்பங்களைச் சேர்ந்தோரும். வல்வெட்டித்துறை தெற்கு [illegible] வைச் சேர்ந்த 811 [illegible]ளைச் சேர்ந்தோரும் அன்று ஆயிரம் ரூபா நிவாரணம் பெறுவர்.

ஏனைய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு பிரதி சனிக்கிழமை தோறும் இந்த நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும் என்று வங்கியின் முகாமையாளர் திரு. [illegible] தெரிவித்தார். [illegible]

## தட்டச்சு நேர்முக பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

முறைசாராக் கல்விநெறியின் ஆங்கில தட்டச்சு, தமிழ் தட்டச்சு பாடநெறிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கான திகதிகள் பின் போடப்பட்டுள்ளன,

10ஆம் திகதி யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த இப்பரீட்சைகள் தமிழ் தட்டச்சு 17ஆம் திகதி காலை 9மணிக்கும், ஆங்கில தட்டச்சு 18ஆம் திகதி காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ஒ-10)

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு 3மாத முகாமைத்துவப் பயிற்சி!

யாழ்ப்பாணம், மார்ச் 8

பயிலுனர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு முகாமைத்துவ பயிற்சி வழங்கப்படும்.

இவர்களுக்கு குறிக்கப்பட்ட பாடசாலையில் யாழ். கல்வித் திணைக்களத்தின் முகாமைத்துவத்துவத்துக்கு பொறுப்பான அதிகாரிகளினால் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படும்.

இது தொடர்பான நடவடிக்கைகளை யாழ், கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது: (உ-10)

## முறைசாராக் கல்விப் பயிற்சி நெறி: 1,200 விண்ணப்பதாரிகள் திணைக்களம் வந்தனர்

முறைசாராக் கல்விப் பயிற்சிநெறி நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளவென சுமார் ஆயிரத்து 200 விண்ணப்பதாரிகள் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தில் குழுமிஇருந்தனர்.

பதினொரு பாடநெறிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று நடைபெற்றன.

பத்திரிகைப் பயிற்சியாளர் நெறிக்கு நேர்முகப் பரீட்சையும் எழுத்துப் பரீட்சையும் நடைபெற்றன.

ஏனைய பாடநெறிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறுமென முறைசாராப் பயிற்சிநெறியின் கல்விஅதிகாரி திரு.எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஒ-10)

## முல்லைத் தீவில் 'தாயகத்தின் குரல்'

முல்லைத்தீவு, மார்ச் 8

முல்லைத்திவு பட்டினத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் தாயகத்தின் குரல் என்னும் ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்துள்ளனர். (ஒ-92)


## தேங்காய்கள் உடன் விற்பனைக்கு

கொடிகாமத்தில் உள்ள எமது தோட்டத்தில் பறித்த நாலாயிரம் (4,000) தேங்காய்கள் மட்டையுடன் விற்பனைக்குண்டு கேள்வி விண்ணப்பங்களை நேரிலோ, கடித மூலமோ கீழ்க்காணும் விலாசத்திற்கு சமர்ப்பிக்கவும்.

ஷப்றா
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். (C/3975)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லம் இராசையா

புலோலி வல்லிபுரக் குறிச்சியை பிறப்பிடமாகவும், பத்திரகாளி வீதி. பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம் காலமாகி விட்டார். இவர் இளைப்பாறிய மதுபரிபாலன உத்தியோகத்தர் திரு. K. இராசையாவின் அன்பு மனைவியும், கிருஷ்ணராஜா, செல்வச்சந்திரன். (கனடா), புஸ்பவதி (பிரான்ஸ்), லோகேந்திரன், மகேந்திரன் (பிரான்ஸ்)' தனவதி (P. M. G Office, Colombo), இந்திராணி, பரிமளா, புஸ்பராணி [பிரான்ஸ்], ஆகியோரின் தாயாரும், திருமதி கமலாசனி [பிரான்ஸ்], யோகம் [கனடா], பாக்கியநாதன், [பிரான்ஸ்] துரைரத்தினம். ரவிதாஸ், ஞானக்குமார் (பிரான்ஸ்), ஆகியோரின் மாமியும், கிருஸ்ணரூபன். டினேஷ் (கனடா) பிருந்தா (கனடா), விதுஷா (பிரான்ஸ்), வினோத் (பிரான்ஸ்), தமிழ்ச் செல்வி ஆகியோரின் பேத்தியுமாவார்.

8-3-90 வியாழக்கிழமை இன்று மாலை 4 மணிக்கு அன்னாரின் ஈமக்கிரியைகள் பருத்தித்துறையில்நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
K. இராசையா

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை. (2740)

### திரு. வேலு மாரிமுத்து

சண்டிலிப்பாயைச் சேர்ந்த வேலு மாரிமுத்து இறைவனடி சேர்ந்தார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, நடராசா (உரிமையாளர் ராஜா கராஜ், சங்கானை), அவர்களின் அன்புத் தந்தையும், கதிரவேலு (கங்கத்திணைக்களம், யாழ்ப்பாணம்), ஞானம்மா, அவர்களின் அன்பு மாமனாரும், மதியூகன் [Norway), மதிவதனி B. A (ஆசிரியை கனகபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி) வாகீசன் (Norway) வாசுகி (தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), கௌரி, கல்யாணி, காயத்திரி, தாட்சயணி, சிவகரன், (Norway), சுதாமதி, அருந்ததி, விக்கினேஸ்வரன், செந்தூரன், அவர்களின் அன்புப் பேரனுமாவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-3-1990 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் சண்டிலிப்பாயில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி. கதிரவேலு

'வாசுகிவாசம்'
7 ஆம் கட்டை, மில்ஒழுங்கை,
சண்டிலிப்பாய். (2747)

### சுப்பிரமணியம் அம்பலவாணர்

(இளைப்பாறிய பிரதமலிகிதர் துறைமுக அதிகாரசபை)

விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும், 193/3 பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சு. அம்பலவாணர் 6-3-90 அன்று மாலை 6 மணிக்கு சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற திருமதி. விசாலாட்சியின் அன்புக்கணவரும், அ. திருஞானசம்பந்தர் (மின்பொறியியலாளர் காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம், பகுதிநேர விரிவுரையாளர் யாழ்தொழில் நுட்பக் கல்லூரி. கொக்குவில்), பரிமளம், நளாயினி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சு.கந்தப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று 8-3-90 காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
அ. திருஞானசம்பந்தர்.
[மகன்]

193/3. பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [12018]

## கண்ணீர் அஞ்சலி

யாழ் இந்துக்கல்லூரியின் புகழ்பரப்பிய பழைய மாணவர்களில் ஒருவராகிய காண்டீபனின் அகாலமரணம் கேட்டு இந்துவின் சமூகமே திகைத்து நிற்கின்றது. அவரின் குடும்பத்தினரின் துயருடன் நாமும் பங்காளியாகின்றோம்.

யாழ். இந்துக்கல்லூரி பழைய
மாணவர் சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலக்சுமி கைலைநாதன்

கொக்குவில் செம்பியன் லேனைச் சேர்ந்த திருமதி விஜயலக்சுமி கைலைநாதன் அவர்கள் 1990-03-05 ந் திகதி காலமானார்கள். அன்னார் கைலைநாதன் (பிரகாஷ் ரான்ஸ்போட் சேர்விஸ்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி கோபிகாவின் அன்புத் தாயாரும், காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற பத்மநாதன், பேரம்மா அவர்களின் அன்பு மகளும், மைலிட்டி தெற்கைச் சேர்ந்த அண்ணாமலை, காலஞ்சென்ற சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மருமகளும், S. P. S. ரான்ஸ்போட் சேர்விசைச் சேர்ந்த சிவனேசன், சிவலிங்கம், சுத்தானந்தன், சர்வானந்தன், விவேகானந்தன், நடராசா (ஜேர்மன்), சிவபாதம் (ஜேர்மன்), செல்வநாயகம் (சுவிஸ்), சிவராசா (கனடா), சோமசுந்தரம் (சுவிஸ்), சரோஜினி தேவி அவர்களின் அன்புச் சகோதரியும், குப்பிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற அன்னம்மாவின் பெறாமகளும், பிரகாஷ் ரான்ஸ்போட் சேர்விஸ் காலஞ்சென்ற சந்திரசேகரம் குலசிங்கம், கந்தசாமி, சரஸ்வதி, சரோஜினிதேவி (சுவிஸ்), சகுந்தலா தேவி (சுவிஸ்), தேவராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1990-03-10 ந் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இல. 44, செம்பியன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தவர்கள்.

இல. 44, செம்பியன் லேன்,
கொக்குவில். (11965)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 8-03-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org